# தொழிற்சாலைகளில் தொழில்நுட்பங்கள் அவசியம்

## திருச்சி சிஐஐ மாநாட்டில் வலியுறுத்தல்




திருச்சியில் நடந்த சிஐஐ உற்பத்தித்துறை மாநாட்டில் சிஐஐ திருச்சி மண்டல துணைத் தலைவர் ஆனந்த் பேசினார். அருகில், உற்பத்தித்துறை குழு ஒருங்கிணைப்பாளர் ஆதப்பன், மாவட்ட வளர்ச்சிக்கான பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவி குமார் உட்பட பலர்.

**திருச்சி, செப். 26–**

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) திருச்சி மண்டலம் சார்பில், 'எதிர்கால தொழிற்சாலைகள்' என்ற தலைப்பில் உற்பத்தித்துறை மாநாடு திருச்சியில் நேற்று நடந்தது.

இதில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, நிதி வசதி, புதிய தொழில்நுட்ப பயன்பாடு, உற்பத்தியை அதிகரிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சிஐஐ திருச்சி மண்டல துணைத்தலைவர் மற்றும் ஜெயம் பில்டர்ஸ் சேர்மன் ஆனந்த் பேசுகையில்:

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சிஐஐ ஒரு நல்ல தளமாக இருக்கும். பெரிய நிறுவனங்களு டன் நேரடியாக தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை பல எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கு உள்ளது. அதற்காக கவலைப்பட தேவையில்லை. பெரிய நிறுவனங்களின் தலைவர்கள், தொழில்துறை வல்லுனர்கள் உள்ளிட்டோரை சிஐஐ மூலம் ஒரே இடத்துக்கு அழைத்து வருகிறோம். அவர்களுடன் நேரடியாக பேசவும், தொழில் வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கவும் முடியும்.

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றபோது, தொழில் அமைப்புகளுடன் முதல் சந்திப்பை சிஐஐ நிர்வாகத்துடன் நடத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. முதல்வர் ஜோசப் விஜய் பொறுப்பேற்ற 3வது நாளிலேயே சிஐஐ நிர்வாகத்தினரை அழைத்து பேசினார்.

எனவே, தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு நிகழ்ச்சிகள், பயிற்சிகள், கலந்துரையாடல்கள் மற்றும் தொழில் தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார்".

உற்பத்தித்துறை குழு ஒருங்கிணைப்பாளர் ஆதப்பன், திருச்சி மாவட்ட வளர்ச்சிக்கான பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவி குமார், அவிவோ ஏஐ டெக்னாலஜிஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி மேகா ராமன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சிவக்குமார் ஆகியோர் பேசினர்.

தொழிற்சாலைகளில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் வேலைகளை எளிதாக்குவது, உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு புதிய திறன்களை கற்றுக்கொடுப்பதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

Source: Dinamalar

Date: 26.09.2026

Page No: 10